# கம்பனின் அரசியல் பார்வை

**உதவிப் பேராசிரியர் ச.கருத்தான்** [1]
Assistant Professor S.Karuthan[1]

**Abstract**

Kamban chosen Politics while he wrote his masterpiece Ramayana and made explicit his political view point through depicting the characters in the epic. This idea permeates when he describes the three Monarchs hailing from Kosalam, Kishkintham and Sri Lanka. He analyses the pros and cons of these three administrative set ups,. In this process, the objective of this paper is to establish Kamban's idea of an ideal government and Political strategy. Kamban does this through the character sketches of Dasarathan, Vaali and Ravana. Kamban had the idea of an ideal government and wanted to correct the ways of Administration.

*Key Words: Ramayana, Kamban, Ideal form of Government, Political Strategy.*

**முன்னுரை**

கம்பன் தன் பாடுபொருளாகத் தேர்ந்தெடுத்த இராமாயணக் கதை அரசியல் நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. கம்பன் இந்த நிகழ்ச்சிகளைக் கையாளும் முறையில் இருந்து அவரின் அரசியல் திறனாய்வுப் பார்வை வெளிப்படுகிறது. அரசியல் கோட்பாட்டை அணுகுவதையும், இராமாயணத்தில் வரும் கோசலம், கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று முடியாட்சிகளிலும் அவற்றின் குறைகளைச் சுட்டிக்காட்டும் பொழுது, கம்பன் ஓர் அரசியல் கோட்பாட்டாளனாகச் செயல்படுகின்றான். அதேநேரத்தில், ஓர் அரசியல் தத்துவ ஞானியாகவும் நின்று ஓர் இலட்சிய அரசு எப்படி இருக்க வேண்டும் என்பதை விவரிக்கிறார். இக்கருத்துகள் வாயிலாகக் கம்பனின் தனித்ததோர் அரசியல் கோட்பாட்டை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் மையப்பொருளாக அமையவுள்ளது.

**தயரதனின் பலவீனங்கள்**

நாடாளும் மன்னனுக்கு மனத்திட்பமும் உறுதியும் தவிர்க்க முடியாத குணங்களாகும். பலவீனங்கள் உடையவன் மன்னனாக இருந்தால், மனம்போன போக்கின்படி நடந்து, நாட்டிற்குப் பெரும் துன்பத்தை விளைவித்துவிடுவான். இவை முடியாட்சியின் குறைகளுள் ஒன்றாக அரசியல் நூலோர் குறிப்பிடுகின்றனர். அயோத்தியின் அரசியல் குழப்பங்களுக்குத் தயரதனின் பலவீனங்களும் காரணமாகின்றன. தயரதனின் முதல் பலவீனம் அவனுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தும், இராமன்மேல் மட்டும் அவன் காட்டும் மிகுதியான அன்பும் பாசமும் அவன் பலவீனத்தின் முதல் தொடக்கம் என்பதை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இதனை,

**"மகன்வயின் அன்பினால் மயங்கி யான் இது புக" (கம்பராமாயணம் 1391)**

என்று தயரதனே அவையோரிடம் கூறுவதிலிருந்தும், இராமன் என் மகன், என் கண், என் உயிர் என்று கைகேயியிடம் கூறுவதிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். கைகேயியிடம் 'பெறுவாயேல் மண்ணேகொள் நீ மற்றையதொன்றும்மற' (1522) என்று கூறுவதிலிருந்தும் இராமனையே அவன் மிகுதியாக நேசிக்கின்றான் என்பதும், அந்த கண் மூடிய பாசத்தால் மகனுக்காக நாட்டையே கைகேயியிக்குத் தாரைவார்க்கத் தயாராக இருக்கிறான் என்பதும் புலப்படுகிறது. புத்திரப் பாசத்தால் புத்தித் தடுமாறித் தயரதன் ஒரு தந்தையாகவே

---

[1]The author is a lecturer in the Thiruchy National College, Tamil Nadu, India.

நடந்துகொள்கிறான். தான் ஒரு மன்னன் என்பதையே அவன் மறந்துவிடுகின்றான். அதனாலேயே மரபுக்கும், தண்ட நீதிக்கும் மாறான வரங்களைத் தரமுடியாது என மறுக்க அவனுக்குத் தோன்றவில்லை.

'ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட பெண்ணின் மீதோ, குழந்தையின் மீதோ அன்பு பாராட்டுவது சார்புணர்வை உண்டாக்கி, நல்லாட்சிக்கு இடையூறு விளைவிக்கும்' என்று கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறுவதை இங்கே நினைவில் கொள்ளலாம். இந்த சார்புணர்வு தோன்றாமலிருக்க அவர் பரிந்துரைக்கும் குடும்பப் பொதுவுடைமை என்ற கருத்து அருவருக்கத்தக்கது. எனினும் சார்புணர்வினால் ஆட்சியாளர்கள் நடுநிலைத் தவற நேரும் என்ற கருத்திலிருக்கும் உண்மையை மறுக்க முடியாது.

தயரதன் இராமன் மீது காட்டும் அளவுகடந்த அன்பும், கைகேயி மீது கொண்ட மோகமும் அவனை அரசன் என்ற நிலையில் செயல்படவிடாமல் தடுப்பதோடு முறை தவறவும் செய்கின்றன. அரசனின் பலவீனங்கள் அரசியலில் விரும்பத்தகாத தீமைகளை விளைவிக்கும் என்பதைக் கம்பன் இங்கே தயரதன் மூலம் சுட்டிக்காட்டுகிறான். அதோடு சிலம்பிலும் ஓர் உதாரணம் காணப்படுகிறது :

**"மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தல்**
**துன்பம் அல்லது தொழுதகவு இல்"(சிலம்பு. 3:2. 10-104)**

என்ற கடமை உணர்வு மறைந்து போய், அது அதிகாரத்தையும் ஆனந்தத்தையும் அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கிறது என்ற எண்ணமும் முதிர்ந்துவிட்ட நிலையில் அதிகார வேட்கையும் சூழ்ச்சியும் இயல்பாகவே தோன்றத்தான் செய்யும். இவை முடியாட்சியோடு சேர்ந்து வளர்ந்த தீமைகள். அயோத்தியின் அரசியல் குழப்பங்களை விவரிக்கும் போக்கில் கம்பன் தயரதனுடைய ஆட்சியின் குறைகளை மட்டுமல்ல; வரம்பிலா முடியாட்சியின் முறைகளையும் சுட்டிக்காட்டுகிறான்.

## வாலி அரசாட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

இராமன் வாலியைக் கொன்றதற்கு இரண்டு காரணங்கள் கூறுவதைப் பார்க்க முடிகிறது. ஒன்று சுக்ரீவனின் அரசாட்சியை ஒத்துக்கொள்ள நேர்ந்த சூழ்நிலையை எடுத்துக்கூறியும் அதனை நம்பாமல் தம்பி என்று கொஞ்சமும் இரக்கம் காட்டாமல் அவனைப் பல்வேறு வகையில் துன்பப்படுத்தியது. அடுத்ததாக, தம்பியின் மனைவி என்றும் பாராது சுக்ரீவனின் மனைவியைக் கவர்ந்தது.

இராமனின் குற்றச்சாட்டுக்கு எதிர்மொழி கூறமுனைந்த வாலி, முதல் குற்றத்திற்கு மறுமொழி கூற இயலாமல், இரண்டாவது குற்றத்திற்கு மட்டும் மறுமொழி கூறுகின்றான். இராமனைப் போன்ற உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கு விதித்ததைப் போல் ஒருவனை மணந்து, ஒருவனையே புணரும் கற்பு நெறியைப் பிரமன் தங்களுக்கு விதிக்கவில்லை என்றும், நேர்ந்தால் நேர்ந்தபடி துய்ப்பவர்களாகவே தங்களைப் படைத்திருக்கிறான் என்றும் கூறுகிறான். இப்பாடலில் மேலும் மனம் போன வழியே செல்வதுதான் தங்கள் ஒழுக்கம் என்னும் வேதநெறிப்படி செய்யும் மணமோ, உயர் குலத்தவர்க்குரிய குணமோ தங்கட்கு இல்லை என்று கூறுகிறான்.

**"மணமும் இல்லை மறைநெறி வந்தன**
**குணமும் இல்லை குலமுதற்கு ஒத்தன**
**உணர்வு சென்றழிச் செல்லும் ஒழுக்கு அலால்" (கம்பராமாயணம் 4047)**

முதல் குற்றச்சாட்டிற்கு மறுமொழி கூறாமல் நழுவுவதிலிருந்து வாலி அந்தக் குற்றத்திற்குரியவன் என்பதை அறியலாம். சுக்ரீவன் தான் அரசாட்சியை ஏற்க நேர்ந்த சூழ்நிலையை உண்மையாகவே எடுத்துரைத்தும், வாலி அவனை நம்பவில்லை. சுக்ரீவனை நம்பாதவன் அமைச்சர்களை விசாரித்து உண்மை நிலைமையைத் தெரிந்துகொண்டு இருக்கலாம். அவ்வாறு அவன் செய்யவில்லை. சினமும் ஐயமும் அவன் அறிவை

அழித்துவிட்டன என்பதையே நாம் உணரமுடிகிறது.

**வாலியின் இரண்டாம் குற்றம்**

இரண்டாவது குற்றச்சாட்டிற்கு வாலி சமாதானம் கூற முற்படுகிறான். வானரர்களுக்குக் கற்பு போன்ற ஒழுக்கங்களைப் பிரம்மன் விதிக்கவில்லையாம். மனம் விரும்பியபடி இன்பம் நுகர்வது அவர்கள் வழக்கமாம். இந்த சமாதானத்தின் போலித்தன்மையை இராமன் தோலுரித்துக் காட்டுகிறான். வாலி, இராமனை ஏசும்போது, 'கோவியல் தருமம்' (4020) பற்றியும்; 'மனுநெறி' (4021) பற்றியும்; 'ஒழுக்கம்' (4022) பற்றியும்; 'சீலம்' (4031) பற்றியும் குறிப்பிடுகிறான். இதிலிருந்து வாலி இவற்றை எல்லாம் அறிந்திருக்கிறான் என்பது தெரிகிறது.

எல்லாம் கற்றிருந்தும், அதன்படி நில்லாதது மட்டுமின்றி, இவற்றைப் பிரம்மன் தங்கள் குலத்திற்கு விதிக்கவில்லை என்று கூறித் தன் இழிந்த ஒழுக்கத்துக்குக் காரணம் காட்டித் தப்பிக்க முயல்கிறான். அறநெறி பிறப்பால் வருவதல்ல. அறிவால் அறிவது. அறநெறியெல்லாம் அறிந்த வாலி அவற்றிற்கு மாறானத் தவறுகளையும் செய்துவிட்டு, தான் செய்வது சரியே என்று சாதிப்பது முறையோ என இராமன் வாலியைக் கேட்கிறான். இராமனின் இந்த வினாவில் உள்ள நியாயத்தை உணர்ந்த வாலி, தனது தவறுகளை ஒப்புக்கொள்வதைப் பார்க்க முடிகிறது. தன் குற்றம் காணாமல் பிறர் குற்றம் காண்பவனாக இருக்கிறான். கல்வி கற்றிருந்தும் அதற்கேற்ப அவன் நிற்கவில்லை. தம்பியின் தாரத்தையே கவர்ந்து வற்புறுத்தி இழிந்த ஒழுக்கத்தில் ஈடுபடுகிறான். யாருடைய சொல்லையும் கேட்காமல் இரக்கமற்றவனாகவும் நடந்துகொள்கிறான். இவையெல்லாம் ஓர் அரசனுக்கு இருக்கக்கூடாத பண்புகள். இந்த குற்றங்களே அவன் அழிவுக்குக் காரணமாகின்றன. அரசனின் தீய ஒழுக்கங்கள் அவன் ஆட்சியை எவ்வாறு சீரழிக்கும் என்பதை வாலியின் வாயிலாகக் காட்டும் கம்பன், பக்குவம் பெறாதவன் பதவி பெற்றார் பதவி சுகத்தில் மயங்கித் தவறு செய்ய வாய்ப்புண்டு என்பதை சுக்ரீவன் வாயிலாக உணர்த்துகிறான்.

**இராவணனின் அரசியல் நிலைப்பாடு**

இராவணனின் அரசு ஒரு வல்லரசாக உள்ளது. இராவணன் அருந்தவமாற்றி அளவற்ற ஆற்றலைப் பெற்றிருப்பினும் அந்த ஆற்றல் செருக்கி அற ஒழுக்கமற்ற வழியில் ஆட்சி செய்கிறான். மற்றவர்களுக்கு அளவற்றத் துன்பத்தை ஏற்படுத்துகிறான். அவர்களை அடிமைப்படுத்தித் துன்பப்படுத்துகிறான். அறமற்ற முறையில் அவன் ஈட்டிய செல்வம் அவனைத் தீயவழியிலேயே செலுத்துகிறது. அவனும் இலங்கை மக்களும் புலனின்பப் போகப் புதைச்சேற்றில் சிக்கிச் சீரழிகின்றனர். இந்த போக வேட்கையே இராவணனைப் பிறன்மனை நயக்கும் பேதைமையின்பால் செலுத்துகிறது. காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்று ஆறு பகைவர்களும் ஒன்றிணைந்து அவனுக்குள் குடிபுகுந்தன. தன்னையே மறந்து தவறிழைக்கிறான். நல்லோர் தொடர்பை நயவாது நாசமுறுகிறான். பழுதெண்ணும் மந்திரிகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பாழாகின்றான். இந்த குற்றங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அவனை அழிப்பதோடு, அவன் நாட்டையும் சீரழிக்கின்றன.

அதிகாரங்களை வசப்படுத்திக் கொள்ளும் முடிமன்னர்களால் விளையும் தீமைகளை அரசியல் நூலார் விவரிக்கின்றார். அவர்கள் சர்வாதிகாரிகளாக மக்கள் கருத்தைத் துச்சமாக மதிப்பர். உலக அமைதிக்குப் பங்கம் விளைவித்துப் பலவீனமான அரசுகளின் மீது படையெடுத்து அவர்களை அடிமைப்படுத்துவர். போர்ச்செயலே அவர்கள் பொழுதுபோக்காகும். வரலாற்றில் ஹிட்லரும் முசோலினியும் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். இராமாயணம் இராவணனை எடுத்துக்காட்டுகிறது. முடியாட்சியை உடைய அரசு எவ்வளவுதான் அறிவும் திறமையும் பெற்றிருந்தாலும், நாகரிகமும் அறிவும் பெற்ற மக்களுக்குப் பொருந்தாத குறையுடைய அரசாகும். அரசியல் அக்கறை, சமூக

ஒற்றுமையைப் பேணுதல் ஆகியன நல்லரசின் குறிக்கோளாகும். முடியாட்சி இந்தக் குறிக்கோளை அடைவதிலும், நல்ல குடிமக்களை உருவாக்குவதிலும் எப்போதும் தோல்வியே அடைகிறது என்பார் அறிஞர் கெட்டல். கோசலம், கிட்கிந்தை, இலங்கை என்னும் மூவரசுகளின் முறைகேடுகளைச் சுட்டிக்காட்டியதன் மூலம் கம்பனும் அதே கருத்தை வலியுறுத்துகின்றான்.

### முடியாட்சியின் விளைவும் - குடியாட்சியின் தேவையும்

தமிழ் நூல்கள் முடியாட்சி பற்றி மட்டுமே பேசுகின்றன. குடியாட்சிப் பற்றிய கம்பனின் அரசியல் கோட்பாட்டில் மக்களுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் அவன் அளிக்கும் முக்கியத்துவம் குறிப்பிடத்தகுந்ததாகும். இராமன் முடிசூடப்போகிறான் என்பதை அறிந்த போது மக்கள்,

**"பூவலயம் இன்று தனி அன்று பொது" (கம்பராமாயணம் – 1592)**

என்று கூறி மகிழ்ந்ததாகக் கம்பன் குறிப்பிடுகிறான். மிகச்சிறிய இந்த வாக்கியம் 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டியது' போலக் கம்பனின் அரசியல் கோட்பாடு அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளக்குகிறது. இதுவே அவன் கோட்பாடு அனைத்துக்கும் அடிப்படையாகவும், கோட்பாட்டின் மூலவாக்கியமாகவும் பார்க்க முடிகிறது.

நாடு தனியொருவனுக்கு உடைமையானதல்ல. மக்கள் அனைவருக்கும் பொதுவானது என்ற கருத்து குடியாட்சிக் கொள்கை பரவிய இக்காலத்தில் சாதாரணமாகத் தெரியலாம். கம்பன் இதைக் கூறிய காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்பதை நினைவில் கொண்டால்தான் இதன் மகத்துவம் புரியும். ஆள்பவன், ஆண்டவனின் அம்சம். நாடும் மக்களும் அவனுடைய உடைமைகள் என்ற கோட்பாடு கோலோச்சிய நாட்டில்,

**"தென்கடல் வளாகம் பொதுமை இன்றி**
**வெண்குடை நிழற்றிய ஒருமையோர்" (புறம்–189)**

என்றும்,

**"வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்**
**போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறா அது**
**கடந்தடு தானைச் சேரலாதன்" (புறம்–8)**

என்றும் குறிப்பிடுகின்றன.

**"வையம் மன்னுயிராக அம் மன்னுயிர்**
**உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன்" (கம்பராமாயணம்–1423)**

கம்பன் இந்த இடங்களில் மக்களே உயிர் என்று கூறியதன் மூலம் மன்னனைவிட மக்களே உயர்ந்தவர்கள் என்று தெரிவிக்கிறான். இந்திய மதங்களின் கொள்கைப்படி உயிர் அழியாதது, உடல் அழிவது. உடல் தன்னைக் காக்கும் ஆற்றலை இழந்துவிட்டால், உடல் அவ்வுடலைக் கைவிட்டு வேறோர் உடலை எடுத்துக்கொள்ள முடியாது. இந்தக் கருத்துகளின் பின்னணியில் கம்பனின் உவமைக்குப் பொருள் காணும்போது மக்களுக்கு அவன் தரும் உயர்வும், சிறப்பும் மிகுதியாகப் புலப்படுகிறது. இதன்மூலம் 'மக்களுக்காகத்தான் மன்னனே அன்றி, மன்னனுக்காக மக்கள் அல்ல' என்பதை அவன் அழுத்தமாகச் சொல்கிறான். அந்த வகையில் பார்க்கும் போது, கம்பன் எந்த அளவிற்குக் காலவுணர்விலிருந்து வேறுபட்டு நிற்கும் புரட்சியாளன் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

### மேலைநாட்டு அறிஞர்களின் கோட்பாடு

மேனாட்டு அறிஞர்களில் சிலரும் இத்தகைய கலப்பு வடிவத்தைப் பரிந்துரைத்துள்ளனர். பழங்காலத்தில் அரிஸ்டாட்டிலும், பதினேழாம் நூற்றாண்டில் ஸ்பினோஸாவும் உயர்குடி ஆட்சி, முடியாட்சி ஆகிய இரண்டும் கலந்த வடிவமே சிறந்தது என்று கருதுகின்றனர். நடைமுறையில் இவ்வாறான கலப்பு வடிவ அரசாங்கங்களை நாம் பார்க்க முடிகிறது.

அடுத்ததாக, கம்பன் கூறுவது அரசன் என்பவர் குறிப்பிட்ட இனத்தின் நலம் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவன் இல்லை. அவ்வாறான ஆட்சி சமூக நீதிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் உதவாது என்பதால் அதை நல்லாட்சியாகக் கருத முடியாது என்ற கொள்கையைக் கம்பன் இராமன் வாயிலாகவே எடுத்துக்காட்டுகிறான்.

**முடிவுரை**

கம்பனுடைய அரசியல் பார்வையாக நாம் பார்க்கும்பொழுது, அவன் அரசியல் பற்றி மிகத் தீவிரமாகவும், ஆழமாகவும் சிந்தித்து இருக்கிறான் என்பதை உணர்த்துகிறது. முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்திருந்தாலும் அந்த ஆட்சி முறையை ஏற்காதவனாகவே கம்பனைக் காணமுடிகிறது. முடியாட்சியின் தீமைகளைக் கோடிட்டுக் காட்டுவதோடு அவற்றை நீக்கவும் முற்படுகிறான். ஒரு நல்லரசு பற்றி மட்டும் அல்லாமல் இலட்சிய அரசு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் பட்டியல் இடுகிறான். எல்லாரும் எல்லாம் பெற்றிருக்க வேண்டும். ஏற்றத்தாழ்வற்ற சமூகம், பெண்களின் முன்னேற்றம், பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று பேதைமை அற்று இருத்தல் எனும் கருத்துகள் அவன் காலத்தில் யாரும் சிந்திக்காதவை என்பதை உணர்த்துகிறான். அவனிடம் பிற்போக்கான கருத்துகளை எல்லாம் எதிர்க்கும் மனம் காணப்படுகிறது. மேனாட்டு அறிஞர்கள் கண்டறிந்த பல அரிய உண்மைகளைக் கம்பன் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே கூறியிருப்பது வியப்பை அளிக்கிறது. கார்ல் மார்க்சின் புரட்சிகரமானத் தத்துவத்தில் காணப்படும் பொதுவுடைமை, அரசற்ற சமூகம் போன்ற கருத்துகளின் மூல வடிவத்தை அப்பொழுதே கம்பன் உணர்த்தியிருப்பது, அவனது மேதைமையைக் காட்டுகிற கம்பன் கவிதையில் மட்டும் அன்றி, தனது அரசியல் கோட்பாட்டினாலும் தமிழ்க் கவிஞர்களுள் தனித்தன்மை வாய்ந்தவனாகவே திகழ்கிறான். ஆக, கம்பனின் அரசியல் கோட்பாட்டுப் பார்வையைத் தமிழ்ச் சமூகத்தில் போற்றுதலுக்குரிய ஒன்றாகவே நாம் காணவேண்டியுள்ளது.

## Biblography

Ilangovadigal. Cilappatikâram.

Kambar. KamparâmâyaGam.

Karuthiruman, P.,G. (1963). Kampan. Chennai: Tamil Puthakalayam.

Kiiran, Pulavar. (2010). IrâmâyaGak Ka7añciyam. Chennai: Vanathi Publication.

Pu_anâIû_u.

Tirukku_a7.